பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 24 புதன்கிழமை (11-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 321

# போர் நிறுத்தம் மற்றும் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டன் தயார்!

## கொழும்பு வந்துள்ள அந்த நாட்டு துணை அமைச்சர் வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஒக்ரோபர் 11

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் மத்தியஸ்தராகப் பணியுரிவதற்கு பிரித்தானிய அரசு தயாராக உள்ளது.

கொழும்பு வந்துள்ள அந்நாட்டு வெளிவிவகார துணை அமைச்சர் ஜெரமி ஹன்லி இத்தகவலை வெளியிட்டதாக "ரோய்ட்டர்" செய்தி நிறுவனத்தை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தற்போது கொழும்பில் நடைபெறும் பொது நலவாய அமைப்பு நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக அவர் கொழும்புக்கு வந்துள்ளார்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் புலிகளின் கண்ணிவெடி!

### 6 படையினர் காயமடைந்தனர்

கொழும்பு, ஒக். 11

ஊர்காவற்றுறையில் பாதுகாப்புப்படையினர் சென்றுகொண்டிருந்த வாகனம்ஒன்று நேற்றுக் காலை 10மணிக்கு விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிக்கு இலக்காகியதில் அந்த வாகனத்தில் சென்ற 6 படையினர் காயமடைந்தனர் என்றும் —

அவர்கள் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்— பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

[ஒ-3]

## யாழ். உணவுக் களஞ்சியங்கள் நேற்றுடன் முற்றாக வெறிச்சோடின!

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். செயலகத்தின் களஞ்சியங்கள் யாவும் வெறுமையடைந்து வெறிச்சோடி விட்டதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

செயலக கையிருப்பில் இருந்த அரிசி, பருப்பு ஆகிய பொருட்கள் தென்மராட்சியில் 10 முகாம்களில் தங்கியுள்ள ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு இரண்டு வாரகாலத்துக்குச் சமைத்த உணவு வழங்கவும்—

கையிருப்பில் இருந்த மா தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த 10 ஆயிரம் குடும்பங்களுக்கு ஐந்து தினங்களுக்கு பாண் வழங்கவும் — விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் ஈழ யுத்தம் ஆரம்பமான பின்னர் இப்போதுதான் முதன்முறையாக செயலக களஞ்சியங்கள் முற்றாக வெறுமை அடைந்துள்ளன என்று தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

[ஒ-3]

## புலிகள் திடீர் தாக்குதல்: அனுராதபுரத்தில் 4 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஒக். 11

அனுராதபுரம் மாவட்டத்தில் எல்லைப்புறப் பகுதியில் கோன்மரியாவ என்ற இடத்தில் நேற்றுக் காலை 7-30 மணிக்கு புலிப் போராளிகள் நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் 4 இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

அந்தக்கிராமத்தில் ரோந்து சென்ற படையணி மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர். (ஒ-க-3)

## 90 ஜூனுக்குப் பின் இப்போதுதான் உணவுகையிருப்பு நிலை மிக மோசம்!

### கொழும்புக்கு அவசர செய்தி

யாழ்ப்பாணம், ஒக். 11

1990 ஜூனுக்குப் பின்னர் இப்போதுதான் உணவுக் கையிருப்பு நிலை மிக மோசமடைந்திருக்கின்றது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபருக்கு நேற்று அனுப்பிய அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக நேற்று அவர் அனுப்பிய இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ உணவு நிலை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

★ மா இல்லாத காரணத்தால் பாண் உற்பத்தி நேற்றுடன் (செவ்வாய்க் கிழமையுடன்) முற்றாக நிறுத்தப்பட்டது.

★ ஏற்கனவே இடம்பெயர்ந்து நிவாரணம் பெற்று வந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கே பொருள் அனுப்ப அரசின் புதிய நடைமுறை

### ஓரிரு தினங்களில் அறிவிப்பு வரும்?

யாழ்ப்பாணம், ஒக். 11

குடாநாட்டுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவது தொடர்பாக அரசு நடைமுறைப்படுத்தவிருக்கும் புதிய திட்டம் பற்றிய அரசின் உத்தியோகபூர்வமான அறிவிப்பு ஓரிரு தினங்களில் வெளியிடப்படவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இப்புதிய நடைமுறையின் பிரகாரம் —

கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கப்பல்கள் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்துவரப்படும். அங்கு அவை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# டக்ளஸ் தேவானந்தாவின் இல்லத்தின் மீது திங்கள் இரவு தாக்குதல்; 4 ஈ.பி.டி.பியினர் பலி

## அவர் ஜன்னல் வழியாகப் பாய்ந்து ஓடித் தப்பினாராம்

கொழும்பு, ஒக். 11

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் கொழும்பு ஹவ்லக் ரவுணில் உள்ள வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஐந்து பேரடங்கிய குழு ஒன்று நவீன ரக ஆயுதங்கள் மற்றும் கிரனேட்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலர்களாயிருந்த ஈ.பி.டி.பியினர் நால்வர் உயிரிழந்தனர். வீட்டின் முன்புறத்தில் தாக்குதல் நடந்த சமயம் வீட்டுக்கு உள்ளேயிருந்த டக்ளஸ் தேவானந்தா ஜன்னல் ஒன்றின் வழியாகப் பாய்ந்து ஓடித் தப்பினார் என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

திடீரென வாகனம் ஒன்றில் வந்திறங்கியோரே முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு அடுத்து கிரனேட்டுகளை வீசித் தாக்கினர் என்று செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருக்கு அஞ்சி வெளியேறுவதா? உடைமைகளைப் பாதுகாப்பதா?

## வடமராட்சி மக்கள் தவிப்பு

யாழ்ப்பாணம். ஒக். 11
வலிகாமம் கிழக்கில் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி மக்கள் இடம் பெயருகிறார்கள். இதனைப் பயன்படுத்தி, அப் பகுதிகளில் திருடர்களின் நடவடிக்கை அதிகரித்துள்ளது. வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து பாதுகாப்புத் தேடுவதா அல்லது வீடுகளில் தங்கியிருந்து தமது உடைமைகளைப் பாதுகாப்பதா என்று தெரியாமல் அப்பகுதி மக்கள் தவிக்கின்றனர்.

வடமராட்சிப் பகுதியை நோக்கி தற்போது அடிக்கடி எறிகணை இராணுவத்தினர் ஷெல் வீச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

திடீர், திடீரென வந்து விழும் ஷெல்களால் உயிரிழப்பு களைச் சந்தித்த அப்பகுதி மக்கள் பீதியினால் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

இதனைப் பயன்படுத்தி குடியிருப்பாளர் இல்லாத வீடுகளில் திருடர்கள் புகுந்து பெரிய திருட்டுக்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை யும் பருத்தித்துறை அட்டா தெருவில் உள்ள இரண்டு வீடுகள் உடைக்கப்பட்டு திருடப் பட்டுள்ளன.

இத்தகைய சம்பவங்கள் பரவலாக வேறு இடங்களிலும் இடம் பெற்றுள்ளன.

அதே சமயம் ஆடு, மாடுகள் மற்றும் கோழிகள் என்பனவும் திருடப்பட்டு வருகின்றன. [எ-15]

# காசுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 11
கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கான ஒரு தொகைக் காசு நிதித்துறையினரிடம் உள்ளது என்றும் அனைவரையும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கன்னாதிட்டியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தந்து காசைப் பெற்றுக்கொள்ளுமாறும் நிதித்துறை நடுவப்பணியகம் அறிவித்துள்ளது.

ரி. இளையதம்பி பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் புத்தூர்.

பிள்ளையனார் இராசேந்திரன் 'லக்ஷ்மி வாசம்' கலைவாணி வீதி, சித்தன்கேணி.

பூமணி (பூமலர்) கணேஸ்வரன் புத்தூர் கிழக்கு, புத்தூர்.

அனாம்பிகை பாலா மாஸ்ரர் மே/பா துர்க்கை அம்மன் கோவில் தேவஸ்தானம்.

நாகலிங்கம் வடிவேலு மீசாலை வடக்கு, கொடிகாமம். (ஓ)

## திரிசாரணர் கலந்துரையாடல்

திரிசாரணர்களின் சேவை விவரம் பற்றிய கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்.

அனைத்து திரிசாரணர்களையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கூடும்படி கோரப்படுகின்றது. (இ)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

(11 — 10 — 1995)



### ★ செல்வன் துரைராஜன் ★

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த
தனேந்திரன் சிவராணி (தயா)
தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன்
செல்வன் துரைராஜன்
தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தமது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தை மாமா (விஜயன்), லீலா அத்தை, பெரியப்பா, பெரியம்மாமார், குரு அண்ணா, கொழும்பு மாமா, அத்தை, திருபரன் அத்தான், கலைமதி மச்சாள், கிருபரன் அத்தான், மதுவந்தி அக்கா, மதுஷன் அண்ணா, மதுசந்தர் அண்ணா, பெரிய பாட்டா, பாட்டி, நித்தி அத்தை, சின்னப் பாட்டி, சாந்தி அத்தை, வசந்தி அத்தை, லண்டனில் வசிக்கும் கலைரசி அத்தை, ராஜன் மாமா, ஜனன் அத்தான், ஜேர்மனியில் வசிக்கும் செந்தில் சித்தப்பா, சித்தி, குலமதி அத்தை, கலாதரன் மாமா, அக்காமார், மச்சான்மார், விஜயகுமாரி அத்தை, சியாமினா மச்சாள், கனடாவில் வசிக்கும் கல்யாணி அத்தை [illegible] சித்தப்பா, இவர்களுடன் க. வை. சற்குணம் குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் எல்லோருமாக செல்வன் துரைராஜன் சகல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் நீடுழி வாழ்கவென அன்போடு வாழ்த்துகின்றார்கள்.

ச. க. தனேந்திரன்,
(முன்னாள் தலைவர்,
யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.)

ஆனைக்கோட்டை,
கொக்குவில் மேற்கு. [38945]

## குருக்கள் தேவை

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம்
ஸ்ரீ கந்தசுவாமி கோயிலுக்கு
நித்திய பூசை, விசேட உற்சவங்களை சிவாகம முறைப்படி செய்யக்கூடிய குருக்கள் ஒருவர் தேவை.

அண்மையில் பெற்ற இருவரின் நற்சான்றுப் பத்திரங்களுடன் பூசை அனுபவம் முதலியவற்றை குறிப்பிட்டு விண்ணப்பங்களுடன் 15-10-95 ஞாயிறு காலை 9.00 மணிக்கு ஆலயத்தில் சமூகம் தரவும்.

மு. ஜெயநாதன்
நிர்வாகஸ்தர்,
பரிபாலனசபை சார்பாக.
(88947)


## புலிகளின் குரல் வானொலியில்

11 — 10 — 1995
புதன்இரவு

★ 8-02 — குயிலோசை—நிகழ்ச்சியில் பண்டார வன்னியன் இசை நாடகத்தின் முதலாம் அங்கம்
★ 8-20 — வர்த்தக விளம்பரங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம்—தமிழ்க்கவி எழுதிய "பெருமை"

12 - 10 — 1995
வியாழன் காலை

★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
★ 8-00 — மணிவரை விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

புதன்மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — படப்பாடல்கள்
★ 5-30 — அறிவூற்று
★ 6-00 — சிறுவர்களுக்கான சில விளையாட்டுக்கள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15— விளையாட்டுச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
★ 6-30 — மணிவரை உங்கள் தெரிவு நிகழ்ச்சியின்

## அதிபர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11
யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான அவசர சந்திப்பு இன்று புதன்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள சாதனா பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)


## 45-ம் நாள் நினைவலைகள்



லெப்டினனட் கீர்த்தி - துப்பன்
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)
யோகீஸ்வரக்குருக்கள் கிருஷ்ணராஜசர்மா

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
| --- | --- |
| 23 - 11 - 1972 | 28 - 8 - 1995 |

அநீதிகளைக் கண்டு நீயும் கொதித்தெழுந்தாய்!
அண்ணன் வழி சென்று - நீயும் பகையழித்தாய்!
எங்கள் இதயத்தின் மலராக நீ சிரிக்கிறாய்!
என்றென்றும் உன்நினைவாய் உன்பணி
தொடர்வோம்.

குடும்பத்தினர்
வேலணை. 43, புதுவீதி, அத்தியடி,
(38958) யாழ்ப்பாணம்

## 93 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10 — 08 — 1917 | 11 — 07 — 1995 |

### திருமதி பவளம் ஐயாத்துரை

அன்பால் வாழ்வூட்டிய எம் அன்புத் தாயார் எம்மை விட்டு பிரிந்து 93 ஆம் நாள் ஆனாலும் அவரது நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலா.

இன்று 11 - 10 - 95 இல் நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

பிரதான வீதி,
சங்கானை கிழக்கு. [88951]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. கிழக்கு விவசாயிகள் சேகரித்த வெங்காயம், தானியங்கள் சேதம்

## வீடு பார்க்கச் செல்வோர் அழிவுகளைக் கண்டு அதிர்ச்சி

அளவெட்டி ஒக். 11

வலி. கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உள்ளபல வீடுகள் படையினரின் ஷெல் வீச்சினால் பெரும் சேதம் அடைந்துள்ளன. ஷெல்லினால் சேதமடைந்த வீடுகளில் விவசாயிகளால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பெரும் அளவு வெங்காயம் மற்றும் தானிய வகைகள் மழையினால் நனைந்து நாசமாகி உள்ளன.

தமது வீடுகளைப் பார்க்கச் சென்றவர்கள் இந்த அழிவுகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த எம். அற்புதம் என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது வீட்டைப் பார்க்கச் சென்றபோது அங்கு அவரது வீடு ஷெல்லினால் பலத்த சேதம் அடைந்திருந்தது.

அவரது வீட்டில் இருந்த இரண்டு மண்ணெண்ணெய் பரல்கள் ஷெல்லினால் சேதம் அடைந்ததால் பரல்களில் இருந்த மண்ணெண்ணெய் முழுவதும் நிலத்தில் கொட்டிக் கிடந்தது.

அத்துடன் சுமார் 350 அந்தர் வரையான வெங்காயம் வைத்திருந்த கொட்டிலும் எரிந்து நாசமாகி இருந்தது.

மேலும் பலரது கொட்டில்கள் ஷெல்லினால் சேதமாகி இருந்ததால் அங்கு வைக்கப்பட்டிருந்த வெங்காயம் மழையில் நனைந்து அழுகிய நிலையில் உள்ளது.

புத்தூர் கிழக்கில் அறிவொளி வீதியில் மட்டும் படையினரின் ஷெல் வீச்சினால் 50க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

இப்பகுதியில் 80 சதவீதமானோர் விவசாயிகள் என்பதால் அனேகமாக எல்லோரின் வீடுகளிலும் வெங்காயமும், தானியங்களும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

குறுகிய நேர அவகாசம் காரணமாக விவசாயிகள் பலரும் உடுத்த ஆடைகளுடன் கையில் அகப்பட்ட பொருள்களுடன் வெளியேறி இருந்தனர்.

இப்பகுதி வயல்களில் கட்டாக்காலி மாடுகள் பெருமளவு திரிகின்றன.

இந்தக் கட்டாக்காலி மாடுகளால் வயல்களில் எஞ்சியுள்ள பயிர்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

கட்டாக்காலி மாடுகள் படையினரின் ஷெல்வீச்சுக்களுக்கு பலியாகும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

இறந்து கிடந்து துர்நாற்றம் வீசும் கால் நடைகளை வீடுபார்க்கச் செல்வோர் எடுத்துப் புதைத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-13]

## உடுவிலில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை 12 ஆம் திகதி தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பிற்பகல் 3.30 முதல் 5.30 மணி வரை—

தாவடி ஜே/192, ஜே/193, ஜே/194 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படும்.

## அறிவியல் வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

மாணவர் அறிவியல் கழகத்தின் செயல்பாட்டு வாரத்தின் போது இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாதாந்த அறிவியல் நிகழ்ச்சி நடைபெறும்.

இதில் பேராசிரியர் கணேசலிங்கம் ''விலங்கியல் துறையின் கண்டுபிடிப்புகளை மேற்கொள்வது எப்படி'' என்ற தலைப்பிலும் கழகப் பதிப்பாசிரியர் திரு. தவபாலன் ''விண்வெளி'' எனும் தலைப்பிலும் அறிவியல் விளக்கம் வழங்குவார்கள்.

## இந்து சமயப் பேரவையின் மகஜருக்குப் பதில்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியின் முடிவில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பப்பட்ட மகஜருக்கு ஜனாதிபதியின் செயலாளர் பதில் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் 23-06-95 திகதியிட்ட கடிதத்தில் மகஜர் கிடைக்கப் பெற்றுள்ளதை அறிவிக்கும்படி ஜனாதிபதி பணித்துள்ளதாகவும்—

அது பற்றி உரிய நடவடிக்கை எடுப்பதற்காக மகஜர் கலாசார சமய அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் இந்து சமய பேரவைக்கு இயன்றளவு விரைவில் பதில் அனுப்பி தமக்கும் பிரதி அனுப்பும்படி கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு செயலாளரை அவர் கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்துமத விரோத நடவடிக்கைகளை ஆட்சேபித்து ஜூன் 15 பேரணி நடைபெற்றது தெரிந்ததே. (க)

## கமக்காரர் அட்டை

யாழ்ப்பாணம், ஒக். 11

விவசாயிகளின் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டைகளை மீளப்புதுப்பிக்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

(க)

## சைவ நெறித் தேர்வுக்கான பரிசளிப்பு விழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஒக். 11

அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை கடந்த ஆண்டு நடத்திய சைவ நெறித் தேர்வுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவார்.

பிரம விருந்தினராக யாழ். வலயம் — 1 இன் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பங்குபற்றுவார்.

''சைவம் காட்டும் மானிட நேயம்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் சிறப்புரையாற்றுவார்.

இந்நிகழ்வில் ஆண்டு 3 முதல் 11 வரை தங்கப்பதக்கம் பெறுவோர் விவரம் வருமாறு:-

★ ஆண்டு 3 — வ. நிருபன் (கொழும்புத்துறை இந்து ம.வி)

★ ஆண்டு 4 — ஜெ. அபிராமி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

★ ஆண்டு 5—ஸ்ரீ. ஸ்ரீமகன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

★ ஆண்டு 6 — பா. காயத்திரி, (வேம்படி மகளிர் கல்லூரி)

★ ஆண்டு 7 — கு. சைலா, (வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி)

★ ஆண்டு 8 — சி. அனிஷா, (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

★ ஆண்டு 9 — செ. தர்மசீலன், (யாழ் பரியோவான் கல்லூரி)

★ ஆண்டு 10 — த. காந்தநேசன், (யாழ். இந்துக் கல்லூரி)

★ ஆண்டு 11 — ம. கதர்சனா, (யாழ்ப்பாணக் கல்லூரி)

## றோட்டறக்ற் பொதுக் கிணறு இறைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ் மிட்-ரவுண் றோட்டறக்ற் கழகம் தொற்று நோய்களைத் தடுக்கும் நோக்குடன் பொதுக் கிணறுகளை இலவசமாக இறைக்கும் திட்டம் ஒன்றை அமுலாக்குகின்றது.

இத் திட்டத்தின் கீழ் யாழ். ரயில் நிலைய சந்தி முகாமின் இரண்டு கிணறுகள் ஏற்கனவே இறைத்து சுத்திகரிக்கப்பட்டன.

பொதுக் கிணறுகளை இறைத்து சுத்தமாக்க விரும்புவோரை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள மேற்படி கழகக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகிறது.

[க]

## தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தபால் தந்தி ஊழியர்கள் சங்கம் முடிவு

தற்போதைய தபால்மா அதிபர் திருமதி எச். எம். எஸ். கொட்டகெதெனியவை பதவியில் இருந்து நீக்க வேண்டும் —

சம்பள உயர்வுப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும் —

போன்ற முக்கிய பிரச்சினைகளை முன் வைத்து தபால் திணைக்களத்தின் முக்கிய தொழிற்சங்கமான தபால்தந்தி ஊழியர்கள் சங்கம் அரசுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் 49ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலில் தமது கோரிக்கைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவது என்றும் —

அது பலனளிக்காத பட்சத்தில் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — சங்க அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

தமது சம்பளப் பிரச்சினைகள் தொடர்பாக [illegible] ரான விதத்தில் திருமதி கொட்டகெதெனிய [illegible] பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது திணைக்களத்தில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளருக்கும் இடையில் தொடர்பில்லாதது இருப்பது முக்கிய குறைபாடு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தபால் தந்தி அமைச்சின் செயலாளரும் தமது கோரிக்கைகளுக்கு செவிமடுப்பதில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

தொழிற்சங்க நடவடிக்கை [illegible] ஏற்படக்கூடும் எனவும் [illegible]

## அதிரடி அரங்கு

அம்படி பாலமுரளி கிருஷ்ணா— உலகிலேயே வயதில் குறைந்த டாக்டர் இவர்தான்.

அமெரிக்காவில் தனது பெற்றோருடன் வசிக்கும் தென்னிந்தியரான பாலமுரளி கிருஷ்ணா இவ்வருட நடுப்பகுதியில் — தமது 17 ஆவது வயதில் — டாக்டர் பட்டம் பெற்றவர்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன்கூட இவரது சாதனையைப் புகழ்ந்து பாராட்டி பேசியிருக்கின்றார். [தமிழீழப் பத்திரிகைகளும் இவரது சாதனை பற்றிய செய்தியை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடத் தவறவில்லை.]

தமது ஆறாவது வயதில் முதலாவது 'கிரேடில்' [முதலாம் வகுப்பில்] சேர்ந்த இவர் அடுத்த சில வாரங்களிலேயே உயர் 'கிரேடுகளுக்கு' மாற்றப்பட்டார். மூன்று வாரங்களில் ஐந்து வகுப்புயர்வுகளைப் பெற்றார். இதே வேகத்துடன் உயர்ந்து 17 வயதில் டாக்டரானார்.

வேகமாக கற்கும் திறனுடைய மாணவர்கள் இருக்கின்றார்கள் என்பதற்கு அம்படி பாலமுரளி கிருஷ்ணாவின் உதாரணம் ஒன்றல்லவா?

நம் மத்தியிலும் — மாவட்ட ரீதியில் பல்கலைக்கழக அனுமதி முறை என்ற திட்டத்தைக் கொண்டு வந்து எம்மை ஒதுக்குவதற்கு கொழும்பு அரசுகள் திட்டமிடும் அளவுக்கு தென்னிலங்கையை விட கல்வித் துறையில் உயர்ந்து அல்லது அதற்கு சமனாக நிற்கும் நம்மத்தியிலும் — இத்தகைய பாலமுரளி கிருஷ்ணாக்கள் இல்லையா? பாலமுரளி கிருஷ்ணாவைப் போல பல வருடங்கள் முன்னே பாயமுடியாவிட்டாலும் ஒரு சில வருடங்களேனும் கல்வித் துறையில் 'பாய்ச்சலில்' முன்னுக்கு வரக்கூடிய மாணவர்கள் பலர் இருக்கத்தான செய்கிறார்கள்.

தற்போதைய கல்வி முறையில் இங்கு ஒரு மாணவர் டாக்டராவதற்குள் அவருக்கு வயது இருபத்தைந்தாகி விடுகின்றது. இதற்கிடையில் சுமார் ஐந்து வருடத்தை கல்விக்காகக் காத்திருப்பதில் அவர் இழந்து விடுகின்றார். உயர்கல்வி அமைச்சின் செயல் திறன் குறைந்த போக்கும் நமது கல்வி முறையுமே இதற்குப் பெரும் காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

எனினும் பின்னால் ஏற்படக்கூடிய இந்த காலவிரயத்தை சரிக்கட்டக் கூடிய வேலைகளை முன்னராகவே கல்வித்திணைக்களமும் கல்வி அமைச்சும் செய்ய முடியும்.

முதலாம் இரண்டாம் ஆண்டுகளிலேயே கல்வியில் சுட்டியாக இருக்கும் மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு ''டபிள் புரொமோஷன்'' கொடுக்கும் ஏற்பாடுகள் — சில கட்டுப்பாடுகளுடன் — இன்னும் நடைமுறையில் இருக்கின்றன.

ஆனால் பயன் படுத்துகின்றார்களா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் யாழ் குடாநாட்டில் எமது உள்ளூர் கல்வித்திணைக்களம் எத்தனை பேருக்கு ''டபிள் புரொமோஷன்'' வழங்கியிருக்கின்றது.

சரி அவர்கள் ''டபிள் புரொமோஷன்'' வழங்க வேண்டாம்; அவர்களுக்கும் கஷ்டம். விட்டு விடுங்கள்.

ஆண்டு பத்தில் கல்வி பயிலும் பல மாணவர்கள் ஆண்டு பதினொன்றுக்குரிய ஜி சீ ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்து தமது திறமையை வெளிப்படுத்துவதற்காக பரீட்சை மண்டபங்களில் போய்க்குந்திய போது பின்புறத்தால் வந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு மண்டபம் மண்டபமாக நுழைந்து அந்த மாணவர்களைத் துரத்திய உயரதிகாரிகள் நம்மத்தியில் எத்தனை பேர்!

ஆண்டு பத்திலேயே ஆண்டு பதினொன்றுக்குரிய பரீட்சைக்குத் தோற்றி திறமைச் சித்திகளைப் பெறக் கூடிய கணிசமான எண்ணிக்கையான மாணவர்கள் நம் மத்தியில் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் முயற்சிக்கு தடைபோட்டுக் கொண்டு, பாலமுரளி கிருஷ்ணாவின் சாதனையைப் பத்திரிகையில் பார்த்து கொட்டாவி விடுவதில் அர்த்தமில்லை

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை வீதியில் 2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி றோ. ஞானப்பிரகாசம், 13, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (38940)

## புலமைப்பரிசில

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி 1995 முதல் நடைமுறைக்கு வரும் புதிய பரீட்சைத் திட்டத்துக்கு அமைவான வழிகாட்டியும் வினா விடைக் கொத்தும், ஆக்கம்: வி. என் எஸ் உதயச்சந்திரன் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2400)

## வலி. கிழக்கு அகதிகளுக்கு உலர் உணவு

தென்மராட்சி, ஒக். 11

வலி. கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் நலனோம்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு கடந்த 9ஆம் திகதி முதல் ஒரு வார உலர் உணவுப் பொருள்கள் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-117)

## மெக்ஸிக்கோ நில நடுக்கத்தில் 60 பேர் பலி

மெக்ஸிக்கோவின் மேற்கு மாநிலங்களான ஜலிஸ்கோ மற்றும் கொலிமா மாநிலங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடுமையான நில நடுக்கத்தினால் சுமார் 60 பேர் வரை உயிரிழந்தனர்.

கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்ந்த நில நடுக்கங்களில் இது மோசமானதாகக் கருதப்படுகிறது.

மேலும் நூற்றுக் கணக்கானோர் இச் சம்பவத்தில் காயமடைந்து உள்ளனர். (இ-எ)


## புதிய கிக்ஸ் அக்கடமி

மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்

**A/L 96 DAY**
**A/L 97**

பௌதிகவியல் 8 – 9
திரு. ஞானேஸ்வரன்

வர்த்தகம் 9 — 10
திரு. சத்தியதாசன்

கணக்கியல் 10 — 11
திரு SAM

அளவையியல் 11 – 12
திரு. பிரபாகரன்

வணிகப்புள்ளிவிபரவியல்
திரு. இராஜேந்திரகுமார்

ஆரம்பம்:
13 – 10 – 1995
காலை 8-00 மணி

**A\L 97**

ஆரம்பம்:
14 – 10 – 1995
4-00 மணி

[38941]



## கணனி இயக்குநர்

கணனி தரவுப் பதிவு வேலைகளில் அனுபவமும், ஆற்றலும் உள்ள ஆண்களிடமிருந்து மட்டும் கணனி இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணனியியல் மற்றும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் இன்று புதன்கிழமை (11 - 10 - 95) காலை 9மணிக்கு நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



## DIPLOMA IN NURSING
## (தாதிப் பயிற்சியில் டிப்ளோமா)

புதிய பயிற்சி நெறிகள்

ஆரம்பம்: 18 - 10 - 1995

- இலங்கை விரிவுரையாளர், இலவச ஆங்கில வகுப்புக்கள்
- சிறந்த விரிவுரையாளர் குழு
- நாட்டில் சிறந்த வைத்தியசாலையில் மாத விசேட செய்முறைப் பயிற்சி
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

விவரங்களுக்கு;

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
Jaffna

[சி-2448]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



### அமரர் முருகேசு கனகசபை
(ஆசிரியர்)

மலர்வு: 26-10-1942
உதிர்வு: 11-09-1995

யார்க்கும் உரியவர் எங்கள் அப்பா
பார்க்குமெத் தொழிலிலும் முன்னோடி ஆனவர்
ஆண்டவன் அடியினி லமைதிகொண் டாரென்று
ஆறுதல் அடைந்து அனைவரும் என்றும்
தேறுதல் பெற்றுத் தெய்வம் தொழுவோம்.

அன்னாரது இறுதி நிகழ்ச்சியில் பங்குபற்றி கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகள்.

இன்று 11-10-1995 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

[38933]

## அருட்திரு 'ஆத்மஜோதி' நா. முத்தையா அடிகளுக்கு அஞ்சலி

ஆறுமுக நாவலருக்குப் பிறகு, அடி மட்டத்தில் இருந்து உயர்ந்த ஆன்றோர் வரை அகிலம் எங்கும் தமிழர்களின் உள்ளங்களில் சைவ - ஆத்மீக நெறியைக் கட்டி எழுப்பியவர்

அருட்திரு "ஆத்மஜோதி" நா. முத்தையா அடிகளார் ஆவார்.

எனது உயிரினும் மேலாம் எனது குருநாதனாகிய அவருக்கு என்னுடைய ஆத்ம அர்ப்பணமான அஞ்சலியைத் தெரிவிக்கிறேன்.

அவரது இளமைக் காலம் முதலே அவரை நான் நன்கு அறிந்தவன். எனது குருநாதனாகி எமது வாழ்வெல்லாம் வளம் பெற வைத்து வாழ்ந்தவர். எமது வாழ்வு மட்டும் அல்ல, நோயுள்ள இடங்களுக்கே மருந்து தேவை என உணர்ந்து ஆத்மீகத் தொண்டாற்றியவர். ஆத்மீக, சமய நெறிகள் மங்கிய, மறந்த இடங்கள் எங்கும் சென்று எல்லோரையும் உள வளம் பெற வாழ வைத்தவர். சிறப்பாக மலையகத் தமிழர்கள் மத்தியில் அவர் ஒரு தெய்வீக மகானாகப் போற்றப்படுபவர். அத்தகைய பெருமகனுக்கு சைவ உலகம் சிலை நிறுவி நினைவு கூருமானால் சைவம் மேலும் மேலும் தழைத்தோங்க வழி வகுக்கும்.

இரா. பசுபதி,
59/1, 4ஆம் குறுக்குத் வீதி,
யாழ்ப்பாணம்

[38943]

## கண்ணீர் அஞ்சலி

எமது நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிசங்கத்தின் நீண்டகால ஆயுட்கால உறுப்பினராக இருந்தவரும் இச் சங்க வளர்ச்சியின் மிக அக்கறை காட்டியவருமான

**அமரர் J N. பொன்னையா**
அவர்களின்

மறைவையிட்டு துன்பப்படும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும், குறிப்பாக எமது சங்க முன்னை நாள் செயலாளராகவும், நீண்ட கால உறுப்பினராகவும் இருந்தவரும்

**P. S திருச்செல்வம்**
அவர்களுக்கும்

எமது ஓய்வூதியர் சங்க உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் சார்பாக எமது ஆழ்ந்த கவலையை சமர்ப்பிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர்
ஓய்வூதியர் நலன்புரி சங்கம்,
மோகனபதி இல்லம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(38942)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 29 — 06 — 1961
உதிர்வு: 11 — 05 — 1995

அமரர்
### வேலுப்பிள்ளை நாகரத்தினம்
(ஐயா)

மாதங்கள் ஆறு போனாலும்
ஆறாது உம் நினைவலைகள்
பாசமும் பரிவும் காட்டி எம்மை
வழி நடத்தி விட்டு, வெளி நாடு போகிறேன்
என்று போய் நடு வழியில் விண்ணுலகம்
போனாயோ ஐயா!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்
மைத்துனர்கள், மைத்துனி,
சகோதரிகள், தாய், மாமன்,
மாமி, உற்றார், உறவினர்கள்

கே. கே. எஸ். றோட்,
கோண்டாவில் மேற்கு.

[38853]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
229/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நூல் உறவும் அறும், கவனம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் உணவு நிலைமை மிகவும் நெருக்கடியான கட்டத்தை – பட்டினிச் சாவுக் கட்டத்தை – நோக்கி நாளாந்தம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

குடாநாட்டின் உண்மை நிலையைத் தெளிவாகப் புலப்படுத்தும் வகையில் நேற்றைய உதயனில் புள்ளி விபரங்களுடன் கூடிய கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம்.

இந்த உண்மை நிலையை மறந்து அத்தியாவசிய சேவையாளர் ஆணையாளர் நாயகம் கொழும்பில் ஏற்கனவே அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும், அதனைப் பார்த்து அவர் திருப்திப்பட்டதும் பழைய சங்கதிகள்.

எனினும் இங்குள்ள நிலைமையை கொழும்புச் சிங்களப் பத்திரிகைகள் சரியாகக் கூறுமளவுக்கு உண்மையான தகவல்கள் கொழும்பு சென்றிருக்கின்றன.

ஆனாலும் அரசு தான் கூறும் பொய்யை மெய்யாக்குவதற்கு முயற்சிக்கிறதே அன்றி—

குடா நாட்டின் உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதில் அக்கறை காட்டுவதாக இல்லை.

யாழ்ப்பாணத்தில் மழை காலம் தொடங்குவதற்கு ஆகக் கூடியது இன்னும் இரண்டுவாரங்களே உள்ளன.

அதற்கு முன்னர் பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையை இங்கு நடத்துவதற்கு இராணுவம் — அரசு — அவசரப்படுகிறது

ஆனால் மழை தொடங்குவதற்கு முன்னர் கப்பல் மூலம் உணவுப் பொருள்களை இயன்றளவேனும் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பதில் துளியளவேனும் சிரத்தை காட்டவில்லை

ஏதோ காரணங்களைக் கூறி உணவுப் பொருள்களை அனுப்புவதனை மழை காலம் ஆரம்பமாகும் வரை தாமதிக்கும் தந்திரத்தைக் கையாள்கிறது. அதன் பின்னர் கால நிலையைக் காரணம் காட்டி இலகுவாகத் தப்பிக் கொள்ளலாம் அல்லவா?

பொதுமக்களுக்குரிய உணவுப் பொருள்களைக் காங்கேசன்துறையில் இறக்கி அங்கிருந்து குடாநாட்டுக்குக் கொண்டு வரும் திட்டம் முழுக்க முழுக்க இராணுவத்தினர் நலன்களை வேணுவதற்கேயாகும்.

குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வருவது என்ற பெயரில், வடக்கு முகாம்களில் குவிக்கப்பட்டுள்ள படைகளுக்குத் தேவையான விநியோகங்களைத் தடங்கல் இன்றிக் கொண்டுவரவே இத் திட்டம் பெரிதும் உதவும்.

யாழ்ப்பாணத்து மக்களைப் பட்டினி போட்டு, அவர்களை அடிபணிய வைக்க வேண்டும் என்பது அரசின் இலக்கு. இராணுவ நடவடிக்கைகளால் ஈட்ட முடியாததை, உணவுத் தடையால் அடைய அரசு முயற்சிக்கிறது.

ஆனால் இந்த உபாயமும் எதிர்மறையான விளைவையே அரசுக்குக் கொடுக்கும் என எச்சரிக்க விரும்புகிறோம். தமிழர்களைப் பொறுத்த அளவில் கொழும்பு அரசு பெயரளவில் தானும் இப்போது உள்ளது. உணவுத் தடை அந்த நூலளவு உறவையும், அறுத்து விடும் கவனம்!

# மாலதி நினைவுதினம் நேற்று எழுச்சி பொங்க அனுஷ்டிப்பு

## மக்கள் உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 11

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முதன் முதலில் வீரச்சாவடைந்த பெண் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு தினமும்——

தமிழீழ பெண்கள் எழுச்சி தினமும்— நேற்று தமிழீழத்தில் மிகவும் எழுச்சி பொங்க அனுஷ்டிக்கப்பட்டது.

கோப்பாய், சாவகச்சேரி, அல்வாய் ஆகிய இடங்களில் பிரதான நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

இவற்றில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

மாலதியின் நினைவு தினத்தை முன்னிட்டு வீதிகள், சந்திகள், பொது இடங்கள், தனியார் கூட்டுறவு அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் யாவும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாலதியின் திருவுருவப் படங்கள் அமைந்து, ஈகச் சுடரேற்றி, மக்கள் மலர் தூவி, மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

### கோப்பாயில்

கோப்பாயில் உள்ள மாலதியின் நினைவுத் தூபிக்கு நேற்றுக் காலை மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் மாதினி தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அர்ச்சனா ஆகியோர் ஈகச்சுடரை ஏற்றினர்.

மகளிர் படையணித் தளபதி தணிகைச் செல்வி தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார்.

மாலதியின் நினைவுத் தூபிக்கு யாழ் மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் தேன்மொழி மலர் மாலை அணிவித்தார்.

கோப்பாய் சந்தியில் உள்ள மாலதியின் உருவப்படத்துக்கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

### வடமராட்சியில்

மாலதியின் நினைவு தினத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக அல்வாய் மாலு சந்தியிலுள்ள மாலதியின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை 9-30 மணியளவில் இடம்பெற்றது.

வடமராட்சி மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மலர்மகள் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின் போது வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு செழியன், வடமராட்சி அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி நிஷாந்தி ஆகியோரும் ஈகச்சுடர் ஏற்றினர்.

யாழ். மாவட்ட கடற்புலி மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி சுதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு அன்பரசன் மாலதியின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து போராளிகளும் பொது மக்களும் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இதனையடுத்து நினைவுரைகள் இடம்பெற்றன.

சாவகச்சேரி பஸ் நிலையம் முன்பாக உள்ள உருவப்படத்திற்கு முன்னால் நினைவு நிகழ்வுகள் நேற்றுக் காலை இடம்பெற்றன.

ஈகச்சுடரை தென்மராட்சி அரசியல் பிரிவு மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி நாமகளும் தென்மராட்சி மாவீரர்பணிமனைப் பொறுப்பாளர் பதுமனும் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியை தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் வெற்றிச்செல்வன் ஏற்றிவைக்க உருவப்படத்திற்கான மலர்மாலையை தென்மராட்சி மாவீரர் பணிமனை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி குறிஞ்சி அணிவித்தார்.

அதன் பின்னர் போராளிகளும் பொது மக்களும் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது,

(அ-3-15 173-117-31)

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 15 வயது, 17 வயது, 19வயது ஆகியபிரிவுகளுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் கலந்து கொள்ளும் பாடசாலை அணிகளின் விபரம்.

★ 15 வயது பிரிவு:- மட்டுவில் ம. வி. எதிர் நாவற்குழி ம. வி.

★ 17 வயது பிரிவு:- சாவகச்சேரி இந்து எதிர் நாவற்குழி ம. வி.

★ 19 வயது பிரிவு:- சாவகச்சேரி டிறிபேர்க் எதிர் சாவகச்சேரி இந்து. (உ-117)

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவிற்காக யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடக்கும் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

இன்று

★ மயிலிட்டி பூமகள் அணி எதிர் கைதடி வளர்மதி அணி

★ கலட்டி கலைவாணி அணி எதிர் சாந்தை விநாயகர் அணி.

நாளை

★ சுதுமலை நாவலர் அணி எதிர் உடுவில் ஞானப்பிரகாசர் அணி.

★ மயிலிட்டி கலைமகள் அணி எதிர் மயிலிட்டி இளங்கோ அணி.

[ஒ-3]

## தேசிய பாதுகாப்பு நிதி: விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 11

கோண்டாவில் மற்றும் திருநெல்வேலிப் பகுதி மக்களுக்கான தேசிய பாதுகாப்பு நிதி சம்பந்தமான விசேட கலந்துரையாடல்கள் இன்று நடைபெறவுள்ளன.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிக்காத ஒப்புதல் அளிக்காத கோண்டாவில் பகுதி யா/ 115, யா/ 116, யா/ 117 யா/ 118, யா/ 119, யா/ 120 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் நிரந்தர, இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் —

இன்று புதன் காலை 9 மணிக்கு கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோயில் அருகில் விசேட கலந்துரையாடல் நடைபெறும்.

திருநெல்வேலிப் பகுதியில் யா/ 111, யா/ 112, யா/ 113 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் நிரந்தர, இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும்—

இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியில் விசேட கலந்துரையாடல் நடைபெறும்.

இந்த விசேட கலந்துரையாடல்களுக்கு குடும்பத்தில் ஆளுமையுள்ள உறுப்பினர் ஒருவரை கலந்து கொள்ளுமாறு பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## அநேகமான பேக்கரிகளில் பாண் உற்பத்தி நிறுத்தம்

யாழ். செயலகத்தின் மாகையிருப்பு முடிவடைந்ததால் பெரும்பாலான பாண் உற்பத்தியாளர்கள் நேற்றுடன் பாண் உற்பத்தியை நிறுத்திக் கொண்டனர்.

90 வீதமான பாண் உற்பத்தியாளர்கள் பாண் உற்பத்தியை நிறுத்தியுள்ளதாகவும்–

ஒருசிலபாண் உற்பத்தியாளர்கள் தம்கைவசம் உள்ள சொற்ப அளவு மாவில் குறிப்பிட்ட அளவு பாணை உற்பத்தி செய்து தமது வாடிக்கையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் ஓரிரு தினங்களுக்கு வழங்குவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 11

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டையடுத்து —

இடம்பெயர்ந்தவர்களுக்கான வாராந்த உலர் உணவு நிவாரணம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் கப்பல்கள் மூலம் வந்து சேரவில்லை என்றும் —

செயலகத்தின் களஞ்சியங்கள் யாவும் பொருள்கள் எதுவும் இன்றி காலியாக உள்ளன என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் கடந்த ஜூலை 15ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட வேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## இரு மீனவர்கள் கரை சேரவில்லை

செம்பியன்பற்று ஒக். 11

கடந்த 7 ஆம் திகதி இரவு வடமராட்சி கிழக்கில் கடல் தொழிலுக்குச் சென்ற இரு மீனவர்கள் நேற்று வரை கரை திரும்பவில்லை.

இவர்கள் இருவரும் ஒரே படகில் தொழிலுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

செம்பியன்பற்று மிக்லர் இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்த பாக்கியநாதன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது நபரின் சடலமும் கரை ஒதுங்கியது

குருநகர், ஒக். 11

குருநகரில் இருந்து கடந்த சனிக்கிழமை பூநகரி - கல்முனைப் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றவேளை காணாமற் போயிருந்த குருநகர் வாசியின் சடலம் நேற்றுக் காலை கொழும்புத்துறை கரையில் ஒதுங்கியது.

இவருடன் ஒரே படகில் சென்ற மற்றைய இருவரது சடலங்களும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் கரை ஒதுங்கி இருந்தது தெரிந்ததே.

சற்றிக் தம்பிநாயகம் கொயின்ஸ் (25 வயது) என்பவரின் சடலமே நேற்று கரை ஒதுங்கியது.

(ஓ-51-15-13-30)

## போர் நிறுத்தம்.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினார்.

அவர் கொழும்பில் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா அரசு தனது சிறுபான்மை மக்களின் மனித உரிமைகளை முன்னேற்றுவதில் உறுதி பூண்டிருக்கின்றதா என்பதை ஆராய்ந்து அறிய நாம் விரும்புகின்றோம். அரசு அதில் ஈடுபாடு காட்டுவதாக எமக்குத் தோன்றுகின்றது.

தேசியப் பிரச்சினைகளை அரசியல் அடிப்படையில் மட்டுமே தீர்க்க முடியும். தற்போது தேவைப்படுவது மேசைசுவார்த்தையே. அதற்கு உதவ பிரிட்டன் தயாராக உள்ளது. இதற்காக இரு சாராரையும் நாம் சந்தித்துப் பேச முடியும். பேச்சுவார்த்தை நடக்கு முன்னர் போர் நிறுத்தப்பட வேண்டும். — என்றார்.

வவுனியா சென்று வடக்கிலிருந்து வரும் மக்களை நாம் சந்திக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-3-6)

## 90 ஜூனுக்குப்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

57 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு ஜூலை 15 ஆம் திகதி முதல் நிவாரணம் வழங்க முடியாதுள்ளது.

★ லீப் போவேட் மற்றும் அண்மைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு ஒருவார நிவாரணம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அவர்களுக்கு நிவாரணம் வழங் பொருள்கள் ஏதும் இல்லை.

★ குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் இன்றி பட்டினி நிலையில் உள்ளனர்.

★ இடம் பெயராத மக்களும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டால் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

★ உள்ளூர் அரிசியின் கையிருப்பும் இமமாத இறுதிவரையே உள்ளது.

★ சவர்க்காரம் ஒன்றின் விலை 40 ரூபா, சமையல் எண்ணெய் ஒரு லீற்றர் 175 ரூபா, ஏனைய பொருள்களின் விலைகளும் பலமடங்கு உயர்ந்துள்ளன.

★ ப. நோ. கூ. சங்கங்கள் கடந்த வாரம் "மாஹோ" கப்பல் மூலம் எடுத்து வந்த — குறைந்த அளவு — பொருள்களும் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட்டு விட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடாநாட்டுக்கு மா எடுத்துவர நேற்று மாலைவரை அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 11

சூடாநாட்டுக்கு அவசரமாகத் தேவைப்படும் மாவை 'ஹபரண' கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும்—அதனை எடுத்து வருவதற்கான அனுமதியை அரசு நேற்று மாலை வரை வழங்கவில்லை என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

திருகோணமலையில் தரித்துள்ள இக் கப்பலில், அவசரம் தேவையான மாவை, மனிதாபிமான அடிப்படையில் ஏற்றி வந்து வழங்க செஞ்சிலுவைச் சங்கசர்வதேசக் குழு இணக்கம் தெரிவித்திருந்தது.

திருகோணமலை 'பிரிமா' ஆலையில் இருந்து மாவை ஏற்றிக் கொண்டு இக்கப்பல் நாளை மறு தினம் பருத்தித்துறைக்கு வரும் என எதிர் பார்க்கப்பட்ட போதிலும்—ஏற்கனவே திட்டமிட்டபடி இக் கப்பல் எதிர்வரும் 18 ஆம் திகதியே பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று இப்போது அறியப்படுகிறது. (ஓ-3)

## கோப்பாய், நீர்வேலி மீது இரவு வேளை ஷெல் வீச்சு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் திங்கள் இரவு 8-30 மணிமுதல் நேற்று அதிகாலை வரை நீர்வேலி, கோப்பாய் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

கோப்பாய் கண்ணகை அம்மன் கோவிலடி, கோப்பாய் வடக்கு, நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

கோப்பாய் வடக்கில் வாழைத்தோட்டம் ஒன்றில் விழுந்த ஷெல்களினால் பல வாழைகள் முறிந்து நாசமடைந்துள்ளன. இப்பகுதிகளில் மக்கள் இரவு நேரங்களில் தங்காத காரணத்தால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (ஓ-15)

## வடக்கே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களஞ்சியப்படுத்தப்படும் —

அந்தப் பொருள்கள் வாகன அணி மூலம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் தரைமார்க்கமாக குடாநாட்டுக்கு எடுத்து வரப்படும்.

உணவுக் கப்பல்கள் எவையும் பருத்தித்துறைக்கு இனி வரா.

தவிர்க்கமுடியாத சில சமயங்களில் மட்டுமே பருத்தித்துறைக்கு கப்பல்கள் வரலாம்.

இந்தப் புதிய நடைமுறை குறித்து கொழும்பில் உள்ள யாழ். செயலக அதிகாரிகளுடனும், சர்வதேச தொண்டர் அமைப்புகளுடனும் பேச்சுகள் நேற்றும் நடந்ததாக தெரியவந்தது.

இத்திட்டம் குறித்து அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓரிரு தினங்களில் வெளியாகலாம் என கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது. (உ-3)

## டக்ளஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வழக்கமாக வாள்கள், கத்திகள், துப்பாக்கிகள் ஏந்திய ஐம்பதுக்கும் அதிகமான கண்காணிப்புப் படையினர் சகிதம், வீட்டைச் சுற்றி கண்காணிப்பு நாய்கள் மற்றும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இருக்கு தேவானந்தா இந்தத் தாக்குதலில் சிறு காயங்களுடன் உயிர்தப்பியதாக மற்றொரு செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

தாக்குதலின் பின்னர் தாக்குதல் நடத்தியோர் தேவானந்தாவின் வீட்டைச் சூறையாடியதாக பிரதி பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனியா குறிப்பிட்டார்.

அவர்கள் தப்பிச் செல்லும் போது பொலீஸ் ஜீப் ஒன்றின் மீது குண்டெறிந்து தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடத்தியோர் விட்டுச் சென்ற குண்டு ஒன்று நள்ளிரவு 11-30 மணியளவில் வெடித்தது என்றும் —

மற்றொரு குண்டு நேற்றுக் காலை செயலிழக்க வைக்கப்பட்டதாகவும் — அறிவிக்கப்பட்டது.

தாக்குதலின் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அல்லது அவரது சகாக்களுடன் தொடர்புகொள்ள எடுத்த முயற்சி பலிக்கவில்லை என கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

இத்தாக்குதல் சம்பவத்தில் ஆர்ச்சனன் உதயணன், ஆசைப்பிள்ளை மோகனதாஸ் பாலன் செல்வக்குமார், கிருஷ்ணபிள்ளை உதயகுமார் ஆகிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்களே உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா செய்தி நிறுவனம் ஒன்றுக்கு ... (உ-க-எ 3)

# மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராசா

[அன்புஸ்ரோர், கல்முனை]

கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா கல்முனையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா- இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் கணவரும் கிரிதரனின் [ஆசிரியர், கல்முனை] தந்தையாரும், இராஜேஸ்வரி, [பொன் குட்டி,] விமலேஸ்வரி, (மணி) காலஞ்சென்ற சந்திரகோபால், ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெயாளினியின், [கௌரி], மாமனாரும், யாசவியின், அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்முனையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விமலேஸ்வரி (மணி),
(சகோதரி)

அம்மன்கோவிலடி,
கொண்டாவில்.

[38950]

### அப்பாக்குட்டி இராசலிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரியில் வசித்துவந்தவருமான அப்பாக்குட்டி இராசலிங்கம் நேற்றுக் காலமானார்

இவர் மனோரஞ்சிதமின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு, சரஸ்வதி, சிவபாக்கியம், ஞானரஞ்சிதம், சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-10-95) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கச்சாய் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருநாவுக்கரசு
(சகோதரர்)

[38954]

### சின்னத்தம்பி இராசையா

நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசையா நேற்று [10-10-95] சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னம்மாவின் அன்பு மகனும், ரூபவதியின் அன்புக்கணவரும், பராசக்தி, விக்கினேஸ்வரன் [விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் கல்வியங்காடு] கோமளாதேவி, பவானந்தவதி, இரத்தினசிங்கம் [விநாயகர் களஞ்சியம் கல்வியங்காடு], ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடேசபிள்ளை, கந்தையா, இராசரத்தினம், கனகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்லம், இரத்தினம், சிவராமலிங்கம் [பாலு], மற்றும் வல்லிபுரம், தங்கம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று [11 - 10 - 95] பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
இ. விக்கினேஸ்வரன்
(மகன்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

[38955]

## ஈவினைப்பகுதியில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

ஈவினைப் பகுதியில் இருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிக்கு சமீபமாக—இராணுவ காவல் நிலைகளுக்கு அருகில்—ஒரு வீட்டில் இருந்தே பிரஸ்தாப பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

இவர் எவ்வாறு மரணமானார் என்பது குறித்து சரியான தகவல் ஏதும் தெரியவரவில்லை.

60 வயது மதிக்கத்தக்க இவரது சடலத்தில் வெள்ளை சிவப்பு கரைபோட்ட சேலை காணப்படுகிறது. (ஒ-13)

## அமைதியாக நடந்துமுடிந்த வல்லிபுர கோயில் உற்சவம்

வடமராட்சி, ஒக்.11

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த தேர், தீர்த்த உற்சவங்கள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் அமைதியாக நடைபெற்றன.

கடந்த பல வருடங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை தான் மிகக் குறைந்த பக்தர்கள் இவ்வுற்சவங்களில் கலந்து கொண்டார்கள்.

வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேச மக்களின் வருகை மிகக் குறைவாக இருந்தது. (இ-173)

## வறுமை நிவாரணம் பெற கால அவகாசம் நீடிப்பு

வறுமை நிவாரண உணவு முத்திரையின் ஐந்தாம் ஆறாம் புள்ளிகளுக்கான உணவுப் பொருள்களைப் பெறுவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலையால் பெரும்பாலான பாவனையாளர்கள் வறுமை நிவாரண உணவுப் பொருள்களைப் பெறவில்லை. இதனைக் கருத்திற் கொண்டே உணவுப்பொருள்களைப் பெறுவதற்கான திகதி இம்மாதம் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட வறுமை நிவாரண உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆவணி, புரட்டாதி மாதங்களுக்கான 5 ஆம், 6 ஆம் புள்ளிகளுக்குரிய பொருள்களை பாவனையாளர்கள் தத்தம் ப.நோ.கூ. சங்கங்களில் 22 ஆம் திகதிக்கு முன்னர் பெறவேண்டும் என்றும்—

அதற்குப் பின்னர் கால எல்லை நீடிக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [அ]

## தேசிய கல்விக் கொள்கை அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஒக். 11

தேசிய கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது கல்விமான்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் இந்த அறிக்கையை பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக கடந்த புதன்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

கல்வி வசதிகளை விஸ்தரிப்பதற்கான வழிவகைகள், அதன் தரம், முகாமைத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான யோசனைகள் இதில் அடங்குகின்றன.

ஆணைக்குழுவின் அடுத்த பணி கல்வி சம்பந்தமாக தேசிய கொள்கையை வகுப்பதாகும். இது பற்றி கல்விமான்களின் ஆலோசனைகளை பெறுவதற்கான 2 நாள் கருத்தரங்கு கொழும்பில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடத்தப்பட இருக்கிறது.

## இருமிநாசனி தெளித்துவிட்டு வீடு திரும்பியவர் மரணம்!

அளவெட்டி, ஒக். 11

கத்தரிக் கன்றுகளுக்கு இருமிநாசனி தெளித்துவிட்டு வீடு திரும்பியவர் திடீரென மயக்கமடைந்து மரணமானார்.

உடுவில் மல்வம் பகுதியில் நேற்றுக் முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

மருதர் அந்தோனிப்பிள்ளை (வயது 45) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமானார்.

கிருமி நாசனி தெளித்துவிட்டு வீட்டுக்கு வந்து குளிக்க ஆயத்தமான வேளை திடீரென அவர் மயக்கமடைந்தார் என்றும்—

பின்னர் அவசரமாக ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட வழியில் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பாகிஸ்தானுக்கு அமெ: உதவி

## இந்தியா தன் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு முடிவு

புதுடில்லி, ஒக். 11

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கத் தொடங்கியிருப்பதை அடுத்து இந்தியா தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்த உள்ளது.

— இவ்வாறு இந்திய பாதுகாப்பு துணை அமைச்சர் திரு எம். மல்லிகார்ஜுன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்குவதால், இந்த பிராந்தியத்தில் ஆயுதக் குவிப்பு தொடங்கவுள்ளது.

இத்தகைய நிலையில் நாம் வெறுமனே இருந்துவிட முடியாது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்

சுமார் 1,700 கோடி ரூபாய்க்கு பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இரு மீனவர்...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொன்சன்ரைன் (23 வயது), முல்லைத்தீவு, டேவிற் முகாமைச் சேர்ந்த சிவலிங்கம் விக்கினேஸ்வரன் (22 வயது) திருமலை ஆகியோரே காணாமற் போனவர்கள் ஆவர். (ஒ-36)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org